**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வகோட்டை**
**முன்னிலை: திரு. நா.சிவபழனி, B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வகோட்டை.
**2025ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11 ஆம் நாள் வியாழன் கிழமை**
திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் ஆவணி–26ம் நாள்

**அசல் வழக்கு எண்.128/2019ல், இடைமனு எண்.3/2024**

முருகானந்தம் ...மனுதாரர்/ வாதி

**//எதிர்//**

1. சாமி வீரப்பன்
2. குமரகுரு
3. ஜெகதீசன் ...எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக11.09.2025 இன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.D.பரிசுத்தநாதன், B.Sc., B.L.,** அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.G.முனிசேகரன், B.A., B.L.,** அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.R.ரவி, B.Sc., B.L., M.B.A.,** அவர்கள் ஆஜராகியும் இருதரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இதுநாள்வரை என் சீரிய பரிசீலனையில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்,

**உத்தரவு**

கடந்த 07.11.2024ம் தேதி, அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தள்ளுபடி உத்தரவை ரத்து செய்து, வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து தக்க உத்தரவிட வேண்டி, உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 9 விதி 9 இன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர் / வாதி தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் :</u>**

2. மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கு பிரதிவாதிகளுக்கு எதிராக, உரிமை விளம்பல் மற்றும் நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 07.11.2024ம் தேதி அசல் வழக்கு வாதி தரப்பு முதல் விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. அன்றை தினம் மனுதாரருக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால் நீதிமன்றத்தில் ஆஜராகி மனுதாரர் தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தை அளிக்காததால் அசல் வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த தவறு வேண்டுமென்று ஏற்பட்டதல்ல. எதிர்வரும் காலத்தில் வழக்கை தொடர்ந்து நடத்த தயாராக உள்ளார். எனவே, அசல் வழக்கில் கடந்த 07.11.2024ம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள தள்ளுபடி உத்தரவை ரத்து செய்து, வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க வேண்டுமென்று மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2ம் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:</u>**

(2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரை 1ம் எதிர்மனுதாரர் ஏற்றுக்கொண்டுள்ளார்)

3. மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரர்கள் தரப்பு முற்றிலும் மறுத்துள்ளது. மனுதாரருக்கு கடந்த 07.11.2024ம் தேதி ஏற்பட்ட உடல்நிலை கோளாரால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். அதற்கு எந்தவித மருத்துவ சான்றிதழ்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை . அசல் வழக்கில் 3வது நபராக சேர்க்கப்பட்டுள்ள ஜெகதீசன் என்பவர் இந்த இடைமனுவில் பிரதிவாதியாக சேர்க்கப்படவில்லை. தேவையான நபரை தரப்பினராக சேர்க்காதது சட்டப்படி ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே, மனுதாரரின் மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று 1, 2 எதிர்மனுதாரர்களால் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:</u>**

4. அசல் வழக்கு கடந்த 15.11.2022ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு பொறுத்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண். C.R.P. (MD) No.324 / 2023ல் 10.02.2023ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி, இந்நீதின்றம் அசல் வழக்கினை 22.03.2024 அன்று ஏப்ரல் 2024ல் பட்டியலில் விசாரணைக்கு எடுத்து 04.04.2024ம் தேதியன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. அன்றை தினம் வழக்கு விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. வழக்கு விசாரணை கடந்த 23.04.2024ம் தேதி வாய்தா ஏற்பட்டு அன்றைய தினமும் மனுதாரருக்கு நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. மீண்டும் பலமுறை மனுதாரருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டும் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் இறுதியாக 07.11.2024ம் தேதி வாதியின் தவறுகைக்காக வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது. மனுதாரர் அன்றைய தினம் உடல் நிலை சரியில்லாததால் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்துவிட்டு, தற்போது பொய்யான காரணங்கள் கூறி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். எனவே, மனுதாரரின் மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று 3ம் எதிர்மனுதாரரால் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரரின் மனு அனுமதிக்கத்தக்கதா?**

6. இம்மனுவில், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் ஏதும் குறியிடப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

7. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் அசல் வழக்கில் வாதியாவார். அசல் வழக்கு, எதிர்மனுதாரர்களுக்கு எதிராக, உரிமை விளம்பல் மற்றும்

நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் கடந்த 07.11.2024ம் தேதி அசல் வழக்கு வாதி தரப்பு முதல் விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டதாகவும், அன்றை தினம் மனுதாரருக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால் நீதிமன்றத்தில் ஆஜராகி மனுதாரர் தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தை அளிக்காததால் அசல் வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், இந்த தவறு வேண்டுமென்று ஏற்பட்டதல்ல என்றும், எதிர்வரும் காலத்தில் வழக்கை தொடர்ந்து நடத்த தயாராக உள்ளதாகவும், அசல் வழக்கில் கடந்த 07.11.2024ம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள தள்ளுபடி உத்தரவை ரத்து செய்து, வழக்கை மீண்டும் கோப்பில் எடுக்க உத்தரவிட வேண்டுமென்று குறிப்பிட்டு, இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் மனுவிற்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடுமையான ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

8. அசல் வழக்கானது கடந்த 22.03.2012 pt24ம் தேதி ஏப்ரல் மாத சிறப்பு பட்டியலில் விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரருக்கு போதிய கால அவகாசமும், வாய்ப்பும் கொடுக்கப்பட்ட பின்னரும், மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி தனது தரப்பு சாட்சியத்தை அளிக்காததால் கடந்த 07.11.2024 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், 07.11.2024 ஆம் தேதி வழக்கு தள்ளுபடி செய்யயப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட16.11.2024ஆம் தேதி, மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டிருந்தாலும், மனுதாரருக்கு அவரது வழக்கை முன்னிலைப்படுத்த போதிய வாய்ப்பு கொடுக்க வேண்டியது அவசியம் என்பதால், இம்மனுவினை செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**9. முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு செலவுத் தொகையாக தலா ரூ.1000/-ஐ வருகின்ற 18.09.2025ம் தேதியன்றோ, அதற்கு முன்பாகவோ, வழங்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 11.09.2025 திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.09.11 16:08:04 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**

**பின் இணைப்பு:**

**மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :** இல்லை

**மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:** இல்லை

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.09.11 16:08:09 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**